
www.padippakam.com

# சிதறும் தேங்காய்கள்

## சிதறும் செல்வத்தை
## சீரான செயல்களுக்கு
## செலவு செய்வோம்!



ஆயிரக்கணக்கில்
தேங்காய்களை
உடைக்கிறேன்
என்று
வேண்டிக்கொண்டு
வருவோர்
பேரவோரையெல்லாம்
தேங்காயகளை
உடைப்பதற்கு
அனுமதிபபது
சமயததை
இழிவுபடுத்தும்
செயலாகும்.



இது
மலேசிய இந்து சங்கம் - மலேசிய இந்து இளைஞர் இயக்கம்
மலேசிய இந்து அர்ச்சகர் சங்கம் - பினாங்கு பயனீட்டாளர் சங்கம்
ஆகியவற்றின் கூட்டு வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com

# தேங்காய் குப்பைத்தொட்டிக்குப் போகக்கூடாது!



## பினாங்கு பயனீட்டாளர் சங்கம் கூறுகிறது!

இரு கரம் கூப்பி வணக்கம் சொல்லி, இந்த சிற்றேட்டின் வழி உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

உணர்ச்சி வசப்படாமல் இந்த சிற்றேட்டின் ஒவ்வொரு பக்கத்தையும் தெளிவாக - மெதுவாக வாசிப்பீர்கள் என பெரிதும் எதிர்பார்க்கின்றோம்.

இவ்வாண்டு ஜனவரி மாதம் 31-ம் தேதி தைப்பூசத் திருநாள் நாட்டின் முக்கிய நகரங்களில் கொண்டாடப்படவுள்ளது.

தைப்பூசத் தினத்தன்று காலங்காலமாக பயன்படுத்தப்பட்டு வரும் அல்லது உடைக்கப்பட்டு வரும் தேங்காய்களைப் பற்றிய ஒரு கல்வி சிற்றேடாக இது தயாரிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் தைப்பூசத்திற்காக உடைக்கப்படும் தேங்காய்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது.

கடந்த 1998-ம் ஆண்டு ஏறக்குறைய 5 லட்சம் தேங்காய்கள் உடைக்கப்பட்டன. அதேப்போல் இவ்வாண்டும் 5 லட்சம் தேங்காய்கள் உடைக்கப்படுமானால் ஏறக்குறைய 10 லட்சம் வெள்ளி செலவாகும்.

இதற்குக் காரணம் கடந்தாண்டு ஒரு வெள்ளிக்கும் கூடுதலாக விற்கப்பட்ட ஒரு தேங்காய், இவ்வாண்டு ஏறக்குறைய இரண்டு வெள்ளிக்கு விற்கக்கூடிய வாய்ப்பு இருப்பதாக ஆய்வுகள் காட்டுகின்றன.

தேங்காய் உடைப்பதை யாரும் எதிர்க்கவில்லை. ஆனால், யாரோ ஒருவர் ஆயிரக்கணக்கில் உடைக்கின்றார் என்பதற்காக நாமும் காரணம் தெரியாமல் எதற்காக ஆயிரம் தேங்காய்களை உடைக்க வேண்டும். சமயவாதிகள் சொல்லியிருப்பதை நன்றாக படித்துப் பாருங்கள்.

அனாதைகள், அபலைகள், கல்வியைத் தொடர முடியாமல் இருப்பவர்கள், பலதரப்பட்ட நோய்களைக் குணப்படுத்த பணபலம் இல்லாதிருப்பவர்கள் இப்படி எத்தனையோ பேருக்கு, இந்தப் பணத்தைச் செலவழிக்கலாம். அதுதான் தெய்வத்திற்குச் செய்யும் பெரிய சேவை.

**"ஆடம்பரமும் அல்ல - ஆர்ப்பாட்டமும் அல்ல - ஆரவாரமும் அல்ல"**



**ஒரு பூ, ஓர் இலை, ஒரு பழம், சிறிது நீர் இவற்றைக் கொண்டு யார் என்னை மாறாத பக்தியுடன் வழிபடுகிறார்களோ அவர்களுக்கு நான் அருள் புரிகிறேன்.**

*- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்*



ஆனால் அதற்கு மனமாற்றமும் - மன உறுதியும் தேவை. நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் தேங்காய்களை வாங்கி, அதனை யாருக்கும் பயன்பெறாமல் போகும் வகையில், உடைத்து பணத்தைச் செலவழிப்பதைவிட, ஒரே ஒரு தேங்காயை மட்டும் உடைத்து, நாம் செலவழிக்க திட்டமிட்டுள்ள மீதப் பணத்தை நல்ல பல சேவை நிலையங்களுக்கு வழங்கலாமே!

மேலும், தேங்காய் ஒரு உணவுப்பொருள். ஆயிரக் கணக்கில் உடைபடும்பொழுது அது போய் சேரும் இடம் குப்பைத் தொட்டியாகிறது. தெய்வத்திற்குப் பிரார்த்தனையாக சமர்ப்பிக்கப்படும் பொருளை குப்பைத் தொட்டிக்குப் போக அனுமதிக்கலாமா?

நூற்றுக்கணக்கான சேவை நிலையங்கள் பணப்பிரச்னையை எதிர்நோக்கியுள்ளன. அவற்றில் தங்கியிருக்கும் ஆயிரக்கணக்கான ஆதரவற்றோர்கள் பல வகைகளில் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

அவர்களைக் காப்பாற்ற நமது பங்கு என்ன? நம்மால் இயன்றதை அவர்களுக்கு மனமுவந்து கொடுக்க வேண்டும். நாம் கொடுக்க நினைப்பதை விரயமாக்கக் கூடாது.

நாம் செய்யும் காரியம் நமக்கும் பயனானதாக இருக்க வேண்டும். பிறருக்கும் பயனளிக்க வேண்டும்.

ஆகவே, எது தேவையோ அதை மட்டும் செய்வோம். தேவை இல்லாததை மறந்துவிடுவோம்.


படிப்பகம்

www.padippakam.com



# அர்த்தமில்லாமல் செல்கிறது தேங்காய் உடைத்தல்!

*- சிவாச்சாரியார் முத்துகுமார குருக்கள் கூறுகிறார்*

தேங்காய் உடைப்பது இப்பொழுது அர்த்தமற்றதாகிக் கொண்டு வருகின்றது என்கின்றார் மலேசியாவின் தலைமை குருக்களான சிவாச்சாரியார் முத்துகுமார குருக்கள்.

ஆயிரம் தேங்காய் என்று வேண்டிக்கொள்ளும் ஒருவர் அத்தனை காய்களையும் சொந்தமாகவே அவரே உடைத்தால் அதில் அர்த்தம் இருக்கின்றது. ஆனால் ஆயிரக்கணக்கில் தேங்காய்களை உடைக்கிறேன் என்று வேண்டிக்கொண்டு, வருவோர் போவோர்களையெல்லாம் தேங்காய்களை உடைப்பதற்கு அனுமதிப்பது நமது சமயத்தை இழிவுபடுத்தும் செயலாக இருக்கின்றது என்று பி.ப.சங்கத்திற்கு வழங்கிய சிறப்புப் பேட்டியில் முத்துகுமார குருக்கள் கூறினார்.

இந்தச் செயல் இந்து மதத்தை இழிவு படுத்துவதோடு முருகக் கடவுளையும் கேவலப்படுத்தும் செயலாகவும் திகழ்கின்றது. காரணம், காலில் செருப்பை மாட்டிக்கொண்டு தேங்காய் உடைக்கின்றார்கள். வாயில் சிகரெட் வைத்துக்கொண்டு தேங்காய் உடைக்கின்றார்கள். தலையில் தொப்பி போட்டுக்கொண்டு தேங்காய் உடைக்கின்றார்கள். இப்படி செய்வது அனைத்தும் நமது இந்து மதத்தை இழிவு படுத்துவதாகும் என்கின்றார் முத்துக் குமார குருக்கள். இந்த அர்த்தமற்ற செயலை நிறுத்த வேண்டும். பிரார்த்தனை செய்தவர், அவருடைய மனைவி, குழந்தைகள் மட்டுமே உடைக்க வேண்டுமே தவிர வருவோர் போவோரெல்லாம் உடைப்பது அர்த்தமற்ற செயலாகும். நாம் செய்வது பிரார்த்தனை. விளையாட்டல்ல. சொந்தமாக அத்தனை காய்களையும் உடைக்க முடியும் என்றால் உடையுங்கள். இல்லையென்றால் உடைக்க வேண்டாம். அர்த்தமில்லாமல் ஒரு காரியம் பண்ணுவதைவிட அக்காரியத்தைப் பண்ணாமல் இருப்பது நல்லது.

*(தொடர்ச்சி 5ம் பக்கத்தில்)*





படிப்பகம்

www.padippakam.com

# ஒரு தேங்காய் உடைத்தாலும் ஆயிரம்தான்! 1000 தேங்காய் உடைத்தாலும் ஒன்றுதான்!

*மலேசிய இந்து சங்கம் வேண்டுகோள்!*



*பி. முருகையா*

***********

சுவாமி பிரம்மானந்தாவின் கூற்றுப்படி ஒரு தேங்காய் உடைப்பது என்பது நமது மனதை சுத்தமாக வைத்துக்கொள்வதற்கும் நம்முடைய கஷ்டங்கள் சிதறிப்போய் விடுவதற்கும் சமமானது என்கின்றார்.

ஒரு தேங்காய் உடைத்தால் அது ஆயிரம் தேங்காய்கள் உடைப்பதற்கு சமம் என்கின்றார் சுவாமி. ஆகவே ஒரே ஒரு தேங்காயை உடைத்து மீதமிருக்கும் தேங்காய்க்குரிய பணத்தை ஆதரவற்றவர்களுக்கு தானமாக வழங்கும்படி அவர் கேட்டுக்கொள்கின்றார்.

இந்தியாவில் ஒரு தேங்காயை உடைத்தார்களானால் சிதறுகின்ற அந்தக் காய்களை மக்கள் எடுத்து பயன்படுத்துகின்றார்கள். சிதறிய அந்த தேங்காய்கள் நல்ல வழிக்குப் பயன்படுத்தப்படுகின்றன. உணவாக மாறி பசியைப் போக்குகின்றது. ஆனால் மலேசியாவில் சிதறிய தேங்காய்கள் குப்பை மேட்டுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. யாருக்கும் பயன்படாத வகையில் இத்தேங்காய்கள் வாங்கப்பட்டதற்கான பணம் விரயம் செய்யப்படுகின்றது என்கின்றது மலேசிய இந்து சங்கம்.

பக்தர்கள் தேங்காய் உடைப்பதை ஒரு பொழுதுபோக்காக ஒரு விளையாட்டாக கருதாமல் ஒரு தேங்காய் மட்டும் உடைத்து தாங்கள் கொடுக்க எண்ணம் கொண்டுள்ள பணத்தை புற்றுநோயால் அவதிப்படுவோருக்கும், நடக்க முடியாமல் சக்கர வண்டியில் அமர்ந்து சென்று கொண்டிருப்போருக்கும், இருதய நோயாளிகளுக்கும், சிறுநீரகக் கோளாறு உள்ளவர்களுக்கும் மற்றும் அனாதை இல்லங்களில் உள்ள ஆதரவற்றோருக்கும் இந்தப் பணத்தை வாரி வழங்கும்படி மலேசிய இந்து சங்கம் கேட்டுக்கொள்கிறது.

சீனர்கள் தேங்காய் உடைக்க வேண்டும் என்று உங்களிடம் கூறினால், எதற்காக தேங்காய் உடைக்க வேண்டும், ஏன் உடைக்க வேண்டும் என்பது பற்றிய விளக்கத்தை அவர்களிடம் எடுத்துக்கூறுங்கள் என பினாங்கு மாநில இந்து சங்க சமூக நலப் பிரிவின் தலைவர் பி.முருகையா கூறினார்.

## தேங்காய்கள் உடைப்பதற்காக 40 லட்சம் வெள்ளி செலவு செய்யப் போகின்றோமா?

*******

**கடந்தாண்டு தைப்பூசத்தில் தேங்காய் உடைப்பதற்காக ஏறக்குறைய 7 லட்சம் வெள்ளி செலவு செய்யப்பட்டது. அச்சமயம் ஒரு தேங்காய் 1.50லிருந்து 1.80 வரை விற்கப்பட்டது.**

**அப்படி இவ்வாண்டு ஏறக்குறைய 5 லட்சம் தேங்காய்கள் உடைக்கப்படுமானால் ஏறக்குறைய 10 லட்சம் வெள்ளி இவ்வாண்டு செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. காரணம் இவ்வாண்டு ஒரு தேங்காயின் விலை ஏறக்குறைய 2 வெள்ளிக்கு எட்டக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. இது தைப்பூசக் காலத்தின்போது ஆகும்.**

**ஆக, இவ்வளவு தொகையை நாம் இவ்வாண்டு செலவு செய்யப்போகின்றோமா?**

**முடிவு உங்கள் கைகளில்தான் இருக்கின்றது.**



**புனித பயன்களை அடைய வேண்டுமானால் புனித முறைகளைத்தான் கையாள வேண்டும். மற்ற முறைகள் தீமைகளை விளைவித்துச் சமுதாயத்துக்கு நஷ்டம் உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை.**

*-மகாத்மா*

## இறைவனுக்கு சமர்ப்பித்த தேங்காய் குப்பைத்தொட்டிக்குப் போகலாமா?



இறைவனுக்கு காணிக்கையாக்கும் பொருளை, இறுதியில் குப்பைத் தொட்டிக்குக் கொண்டு செல்ல அனுமதிப்பது சரியாகுமா? சரியில்லை என்று நீங்கள் நினைத்தால், அடுத்தது என்ன செய்யலாம் என்று நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.





படிப்பகம்

www.padippakam.com



# ஆதரவற்றோருக்கு உதவி செய்யுங்கள்!

### "மக்கள் சேவையே மகேசன் சேவை"

***மலேசிய இந்து இளைஞர் இயக்கம் அறைகூவல்***

அந்தக் காலத்தில் ஒரு தேங்காய் 10 காசுக்கு விற்கப்பட்டது. மக்கள் இஷ்டம்போல் உடைத்தார்கள்.

ஆனால் இன்று தேங்காய் ஒன்றின் விலை ஒரு வேளை மதிய உணவின் விலையாக இருக்கிறது என மலேசிய இந்து இளைஞர் இயக்க பேரவையின் கௌரவச் செயலாளர் பி.பாலகிருஷ்ணன் கூறினார்.

இன்றைய இந்து இளைஞர்களின் எண்ணத்திலும் சிந்தனையிலும் மாற்றம் தேவை.

இந்தியர்களிடையே குறிப்பாக இளைஞர்களிடையே தலைதூக்கி நிற்கும் சமூகப் பிரச்னைகளை துடைத்தொழிப்பதற்கு இந்து இளைஞர்கள் முன்வர வேண்டும் என இந்து இளைஞர் இயக்கம் வேண்டுகோள் விடுக்கின்றது.

"மக்கள் சேவைதான் மகேசன் சேவை". மக்களுக்கு குறிப்பாக பிரச்னைகளிலிருந்து விடுபடாமல் தவித்துக்கொண்டிருப்-போருக்கு நாம் உதவி செய்தல் அல்லது அவர்களை பாதுகாப்பான இடத்தில் கரை சேர்த்துவிட்டால் அதுவே இறைவனுக்கு நாம் செய்த ஒரு சேவை என்கின்றார் பாலகிருஷ்ணன்.

தைப்பூசத்தின்போது, இளைஞர்கள் அதிகமாக தேங்காய்களை உடைக்க விரும்புகின்றனர்.

கட்டுப்பாடில்லாமல் தேங்காய் விற்கப்பட்டும் உடைக்கப்படுவதன் காரணமாக அது இன்று கட்டுப்பாட்டுப் பொருளாக அறிவிக்கப்பட்டுவிட்டது. ஆகையால் நாமும் கட்டுப்பாட்டோடு நடந்து கொள்ள வேண்டும்.

தமிழ் பத்திரிகைகளில் அவ்வப்போது தங்கள் நோய்களைப்பற்றி விளக்கி சிகிச்சை பெறுவதற்கு பணம் போதவில்லையே என கண்ணீர் வடிக்கும் ஏழைக் குடும்பங்களுக்கு நிதி திரட்டி அவர்களின் உயிர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பை இந்து இளைஞர்கள் பெற்றிருக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றார் மலேசிய இந்து இளைஞர் இயக்கத்தின் கௌரவச் செயலாளர் பி.பாலகிருஷ்ணன்.

> ***கடவுள், தாம் அளிக்கின்ற உண்மையான சுதந்திரத்துக்கு விலையாக, பரிபூரண சரணாகதியைத்தான் விரும்புகிறார். அதற்குக் குறைந்த எதையும் அவர் விரும்பவில்லை. ஒருவன் இவ்வாறு தன்னை பரிபூரணமாக அர்ப்பணித்த மாத்திரத்தில் தான் சகல ஜீவராசிகளுக்கும் ஊழியன் என்பதை அறிந்து கொள்வான்.***
>
> ***- காந்திஜி***

*(3ம் பக்கத் தொடர்ச்சி)*

## அர்த்தமில்லாமல் செல்கிறது தேங்காய் உடைத்தல்!

**பொருளாதாரம் என்று சொல்லும் பொழுது, எங்களுடைய பணம், எங்களால் சமாளிக்க முடியும், யாருடைய பொருளாதாரத்தை அது பாதிக்கிறது? அரசாங்கத்தின் பொருளாதாரத்தை அது பாதிக்கின்றதா? என்னால் முடியும். என்னிடம் காசு இருக்கின்றது, தகுதி இருக்கின்றது என்பதால்தால் நான் உடைக்கின்றேன் என்று சிலர் வாதாடுகின்றார்கள்.**

**உங்களுடைய பிரார்த்தனையை நிறைவேற்றுவதை கேளிக்கையான விஷயமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. இல்லையென்றால் அது இறைவனை அவமானப் படுத்துவதாகவும், சமய கலாச்சாரத்தை அசிங்கப் படுத்துவதாகவும், அர்த்தமில்லாத காரியமாகவும் தெரிகிறது என்கிறார் முத்துகுமார குருக்கள்.**

**தேங்காய் உடைப்பது ஒரு கேளிக்கையான காரியமாக வந்துகொண்டிருக்கிறது. அதனை நிறுத்த வேண்டும். இப்படித் தைப்பூசத்தின்போது எல்லோரும் இந்த பணத்தை தர்மத்திற்குக் கொடுத்தால் தைப்பூசத்தன்று பல ஆயிரங்களைச் சேகரித்துவிடலாம்.**

**அந்தப் பணத்தை நம்முடைய பிள்ளைகளில் பத்து பிள்ளைகள் பல்கலைக்கழகத்திற்குச் செல்வதற்கு உபகாரச் சம்பளமாகக் கொடுக்கலாம்.**

**இந்தச் செயல் நம் சமுதாயத்திற்கு எல்லா வகைகளிலும் நன்மை பயக்கும் என்பதை பக்தர்கள் உணர வேண்டும் என்று பினாங்கு பயனீட்டாளர் சங்கத்திற்கு வழங்கிய ஒரு சிறப்புப் பேட்டியில் கூறினார் சிவாச்சாரியார் முத்துகுமார குருக்கள்.**



படிப்பகம்

www.padippakam.com

# நீங்கள் உடைக்கும் தேங்காய் எப்படி














படிப்பகம்

www.padippakam.com

# ாங்கே கொண்டு செல்லப்படுகின்றது?












"ஒருவர் தம் பிரார்த்தனையை முடிக்க வேண்டுமானால் - 2 தேங்காய்கள் போதுமானது. ஆண்டவனுக்கு நிவேதனப் பொருளாக அர்ச்சனை செய்ய ஒன்றும், சிதறு தேங்காய் உடைக்க வேண்டும் என்று கருதினால் அதற்கு ஒன்றும் ஆக இரண்டு போதுமானது."


படிப்பகம்

www.padippakam.com

# "சிதறும் தேங்காய்"

சைவமணி மு.முனியாண்டி
தலைவர் - மலேசிய இந்து அர்ச்சகர் சங்கம்



*"விக்கினராஜ கணேசான
சிவ புத்ரோ விநாயகா
நாலி கேரம் ப்ர தாட்யே ஹம்
விக்ண நாம உப ஹாரிணே"*

என்று மந்திரங்கள் கூறுகின்றன. "பிள்ளையார்" என்று கிராம மக்களால் போற்றப்படுபவர்க்கு தங்களின் காணிக்கையாக விளை நிலத்திலே விளைந்த தேங்காயை உடைத்து காணிக்கையைச் செலுத்தினர்.

அது மட்டுமல்லாமல் தத்துவார்த்தங்களை விளக்கிக் காட்டும் ஒரு பொருளாகவும் - அதே நேரம் சிதறும் தேங்காய்த் துண்டுகளை சிறுவர்கள் முண்டியடித்துக்கொண்டு பொருக்கி உண்டு மகிழும் பொருளாகவும் விளங்குகிறது.

முதலில் இவை காட்டும் தத்துவார்த்தங்களை ஆராய்கின்றபோது, நன்கு பருமனாகவும் பளபளப்பாகவும் இருக்கிறது. இதைப் பிளந்து பார்க்கத் தூசும் நாரும் பின்னப்பட்டதாகவும், அதை நீக்கினால் கடுமையான கரும் ஓட்டினால் மூடப்பட்டதாகவும், ஆட்டினால் உள்ளே தண்ணீர் இருக்கின்ற ஓசையும் கூடியதாகவும் இருக்கிறது.

மலமாயா கர்மங்களை விலக்கினால் இறைவனைக் காணலாம் எனவும், மூன்று கண்களையுடைய தேங்காய் சிவபெருமானுடைய தரிசனமாகவும், இனிய நீர் கங்கையின் புனிதமாகவும் கருதவும் இடமிருக்கிறது.

இப்படிப் புனிதமிக்க தேங்காய்களைப் பாதத் தூசுகள் படுகின்ற இடத்திலே, எவரோ வேண்டிக்கொள்ள அவராகவே உடைக்காமல் யாருக்காகவோ யார் யாரெல்லாம் உடைக்கப்படுவதைப் பார்க்கின்றோம்.

நமது ஆன்றோர்கள் பழமொழியாக "கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்த கதையாய்" என்று கூறக் கேட்கிறோம். இதுவும் கணேசருக்குத்தான் உடைக்கப்படும் தேங்காய் என்று உறுதியாகக் கூறுகிறது.

இன்றையப் பொருளாதார நெருக்கடியில் விலை, அதன் பயன் என்று பகுத்துப் பார்த்து இதனால் யார் பயன் அடைகிறார்கள் - மனிதருக்கோ மற்ற உயிரினங்களுக்கோ பயன் தருகிறதா? என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

*"சிக்கனம் சிறப்பைக் கொடுக்கும்"
"ஆற்றில் போட்டாலும் அளந்து போடு"
என்று கூறக் கேட்டிருக்கிறோம்.*

ஒருவர் தம் பிரார்த்தனையை முடிக்க வேண்டுமானால் - 2 தேங்காய் போதுமானது. ஆண்டவனுக்கு நிவேதனப் பொருளாக அர்ச்சனை செய்ய ஒன்றும், சிதறு தேங்காய் உடைக்க வேண்டும் என்று கருதினால் அதற்கு ஒன்றும் ஆக இரண்டு போதுமானது.

அதை விடுத்து வருடத்திற்கு வருடம் உடைக்கும் தேங்காய்களைப் பெருக்கிக் கொண்டு போவது கூடாது. பக்தியோடு நமது பகுத்தறிவையும் சேர்த்து மக்கள் பயன்பெறும் காரியங்களைக் கூட்ட வேண்டும். தமிழ் வளர்ச்சிக்கு உதவ முன் வர வேண்டும்.

திருமணம் மற்றும் பொதுக் காரியங்கள் நடத்த "தமிழர் மண்டபங்கள்" எழுப்ப முன் வர வேண்டும்.

பக்தி நெறி பரவ தேவாரத் திருவாசக, ஆழ்வார்களின் திவ்யப் பிரபந்தங்களைத் தமிழில் பாட ஓதுவார்களையும், ஆலயங்களில் செம்மையாக வழிபாடு நடைபெற அர்ச்சகப் பயிற்சியும் - நிர்வாகப் பயிற்சியும் ஆக்கும் செயலுக்கு உதவ முற்பட வேண்டும்.

ஏழ்மையால் வாடும் குடும்பத்திற்கு உதவியும் ஒத்தாசையும் தர முற்பட வேண்டும்.

கோரிக்கை அற்று - வேரில் பழுத்த பலா பழங்களாக காட்சி தரும் நம் தமிழ்ச் சகோதரிகளை தக்க மணமகனைத் தேடி திருமணம் செய்து வைக்கின்ற புனிதமிக்க காரியங்களைச் செய்யலாம்.

படித்தும் - படிக்காமலும் இருக்கும் மாணவ மாணவியர்கள் பலர் மன உளைச்சலுக்கு ஆளாகி பல கெட்ட பழக்கங்களுக்கு அடிமை ஆகி நாட்டுக்கும் வீட்டுக்கும் கேடு தருகின்ற விதத்தைக் கண்டு பிடித்து மாற்றி நல்ல குடிமக்களாக மாற்ற முன் வருவதும் நாம் ஆற்ற வேண்டிய தொண்டுகள்.

ஆகவே இந்து இளைஞர்கள் சிந்தித்து - ஆர்ப்பாட்டம் இல்லாத சமயச் சடங்குகளை ஊக்கப்படுத்த முன் வர வேண்டும்.

சிதறும் தேங்காய்களால் சிதறும் நமது செல்வத்தை சீரான செயல்களுக்கு செலவு செய்ய முன்வர நம் இந்து பக்தர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*"காசு மிகுந்தவர் பொற்குவை தாரீர்
அதுவும் அற்றார் ஆண்மையை நல்கீர்"
- பாரதியார்*

**பிள்ளையார்க்குத் தேங்காய் உடைப்பது நமது சம்பிரதாயமாய் இருந்தது. ஆனால் திருமுருகனுக்குத் தேங்காய் உடைக்கும் பழக்கம் எப்போது எப்படி வந்தது. நமது இந்து ஆலயங்களை ஒருங்கிணைக்க வேண்டும். ஆலயங்கள் விழா எடுக்க மட்டுமல்ல, கல்விக்கூடங்களாகவும் மாற வேண்டும்.**


***- பேரா மாநில சட்டமன்ற உறுப்பினர்
திரு ம.முத்தையா
(5.2.98 - தினமுரசு)***



படிப்பகம்

www.padippakam.com

# இருளிலிருந்து விலகி எங்களோடு சேருங்கள்!



**நாங்கள்** நீங்கள் ஏமாற்றப்படும்போது, அநியாயமாக வேலையிலிருந்து நிறுத்தப்படும்போது, அல்லது கட்டாயமாக அப்புறப்படுத்தப் படும்போது உங்கள் உரிமைகள் என்ன என்பதை அறியச் செய்வோம்.

**நாங்கள்** உங்களுக்கு வீட்டுக் 'குறிப்புக்கள், ஆரோக்கிய குடும்ப தகவல்கள், நல்ல வாழ்க்கை, பணம், சேமிப்பு, சுற்றுப்புற பாதுகாப்பு இன்னும் அநேக தகவல்களை தெரியப்படுத்துவோம்.

உரிமை அறிந்திட, விழிப்புணர்வு பெற பயனீட்டாளர் குரல் படியுங்கள்!




**நாங்கள்** உங்களுக்கு சுகாதாரமற்ற பாதுகாப்பில்லாத பொருட்கள், வியாபார மோசடிகள், மேம்பாடு தில்லு முல்லுகள், நிதி மோசடிகள், மோசமான சேவைகள் ஆகியவற்றை தெரிவிப்போம்.

**நாங்கள்** உங்கள் உணவு, உங்கள் இல்லம் மற்றும் உங்கள் வேலை செய்யுமிடத்தில் உள்ள ஆபத்துக்களைப்பற்றி உங்களுக்கு தெளிவுப் படுத்துவோம்.

இவற்றை நாங்கள் செய்வதற்கான காரணம், எங்களுக்கு அக்கறை இருக்கிறது. மேலும் உங்களின் உலகளாவிய பொது அறிவு வளர வேண்டும் என்பதும் எங்களின் அவா. ஆக இனியும் இருளில் இருக்காதீர்கள். எங்களோடு இணைந்து வாருங்கள். அதற்கு எங்களின் *பயனீட்டாளர் குரல்!* மாத இதழை தொடர்ந்து படியுங்கள்.

**"ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய அத்தியாவசிய பத்திரிகை"**

✂

சந்தா விபரம்: 1 ஆண்டு $10.00 ☐ 2 ஆண்டு $19.50 ☐ 3 ஆண்டு $29.00 ☐

எதிர்வரும் ____________ 1999-லிருந்து என் முகவரிக்கு *பயனீட்டாளர் குரல்* இதழை அனுப்பி வைக்கவும்.இத்துடன் ம.பெ. ____________ அனுப்பியுள்ளேன்.

என் பெயர் : ________________________
(ஆங்கிலம்)

முகவரி:: ________________________

________________________

*பாரத்தையும் பணத்தையும் அனுப்ப வேண்டிய முகவரி:*

Persatuan Pengguna Pulau Pinang (CAP), 228 Jalan Macalister, 10400 Pulau Pinang.



படிப்பகம்

# நாட்டின் நிலைமை கருதி தைப்பூசத்தில் சிக்கனத்தைக் கடைபிடிப்பீர்!

அ.வைத்தியலிங்கம்
தலைவர், மலேசிய இந்து சங்கம்

******************************

நமது நாடு தற்போது எதிர்நோக்கி வரும் பொருளாதாரச் சிக்கலை மனதில் கொண்டு மலேசிய இந்துக்கள் தங்களது சமய விழாக்களைக் கொண்டாடும்பொழுது சிக்கனப் போக்கைக் கடைபிடிக்க வேண்டியது அவசியமாகிறது. நமது சமய தத்துவங்களும் எளிமை, சிக்கனம், ஆழமான பக்தி, வைராக்கியம் ஆகிய பண்புகளையே பக்தர்களிடம் வலியுறுத்துகிறது. இவையே கடவுளின் அருமை நமக்குப் பெற்றுத்தரக்கூடிய சாதனங்களாகும். இப்படிக் கூறுகின்றார் மலேசிய இந்து சங்க தேசியத் தலைவர் திரு அ. வைத்தியலிங்கம்.

தைப்பூசம் அதிக ஆடம்பரத்துடனும், ஆரவாரத்துடனும் கொண்டாடப் படுகின்ற ஒரு திருவிழா. அங்காடிக் கடைகள், பொருள்கள் விற்பனை, உணவு, குளிர்பானம், பலகாரங்கள் விற்பனை என்று பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளுக்கு தைப்பூசம் இடம் கொடுக்கிறது. அது மட்டுமின்றி பக்தர்கள் பல்லாயிரக்கணக்கில் கூடி அர்ச்சனை, தேங்காய் உடைத்தல் போன்ற நடவடிக்கைகளில் லட்சக்கணக்கான பணத்தை செலவழிக்கின்றனர். ஒவ்வொரு தைப்பூசத்திலும் தேங்காய் விற்பனையில் சுமார் 10 லட்சம் ரிங்கிட் செலவிடப்படுவதாக ஒரு ஆய்வு காட்டுகிறது.



பினாங்கில் தேங்காய் உடைப்பவர்கள் பெரும்பாலும் சீன சமூகத்தினர் என்றாலும் நாமும் இக்காரியத்தில் சளைத்தவர்கள் அல்ல. நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் இவ்வளவு ஆடம்பரச் செலவு அவசியம்தானா என்று நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. மேலும், சமய தத்துவங்களின்படி தேங்காய் உடைக்கும் சடங்கு பிள்ளையாரின் முன் செய்ய வேண்டிய ஒன்றே அன்றி, முருகன் முன் அல்ல என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நமது அருளாளர்கள் தங்களது திருப்பாடல்களிலும் உபதேசங்களிலும் வழிபாட்டில் எளிமை அவசியம் என்பதை அதிகம் வலியுறுத்தியுள்ளனர். திருநாவுக்கரசு சுவாமிகள் தமது திருவதிகை திருப்பதிகத்தில்

*"சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்"*

என்று பாடியுள்ளார். எளிமையான, எல்லோராலும் செய்யக்கூடிய வழிபாட்டு பொருட்களைக் கொண்டு இறைவனைத் தொழ வேண்டும் எனும் கருத்தை வலியுறுத்தியதோடு அவ்வழிபாட்டில் நமக்குத் தெரிந்த தாய்மொழியைப் பயன்படுத்த வேண்டும் என்று கூறியிருப்பது சிந்தனைக் குரியதாகும்.

பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தில்

*"புண்ணியம் செய்வார்க்கும் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அது கண்டு அருள்புரிய நிற்கும்"*

என்று திருமூல தேவ நாயனார் எளிமையான வழிபாட்டே இறைவனுக்கு ஏற்புடையது என்று வற்புறுத்தியுள்ளார்.

இந்து சமய தத்துவ நூல்களில் உலக மொழிகளில் அதிகம் மொழி பெயர்க்கப்பட்ட நூல் எனும் பெருமைக்குரியது பகவத்கீதையாகும். அதில் அர்ச்சுணன் பரமாத்மாவாகிய உம்மை எப்படி வழிபடுவது என்று கேட்டதற்கு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறும் பதில் இப்படி வருகிறது:

""ஒரு பூ, ஓர் இலை, ஒரு பழம், சிறிது நீர் இவற்றைக் கொண்டு யார் என்னை மாறாத பக்தியுடன் வழிபடுகிறார்களோ அவர்களுக்கு நான் அருள் புரிகிறேன்."

இதிலிருந்து இறையருளைப் பெற்றுத்தருவது ஆடம்பரமும், ஆர்ப்பாட்டமும், ஆரவாரமும் அல்ல என்பது தெளிவாகிறது. மாறாத, எளிமை கலந்த பக்தியே நமக்கு இறையருளைப் பெறுவதற்குப் பாத்திரமாகிறது. எந்நிலையிலும் தன்னை மறந்திராத பக்தர்களையே இறைவன் அதிகம் விரும்பி அருள் பாலிக்கிறான் என்பதை அனைத்து அருளாளர்களும் கூறிச் சென்றுள்ளனர்.

www.padippakam.com

சாதாரணமாகவே நமது ஆலய திருவிழாக்களும், கும்பாபிஷேகம் போன்ற சடங்குகளிலும் அதிகப்படியான செலவு செய்யப்படுவதை நாம் காண்கிறோம். நாம் செல்வம் படைத்த சமூகமல்ல. பலரிடம் நன்கொடை வசூல் செய்தும், கலைநிகழ்ச்சி போன்ற நிதி திரட்டும் நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலமும் வேண்டிய நிதியைத் திரட்டி நாம் இந்நிகழ்ச்சிகளை நடத்த வேண்டியுள்ளது. அவ்வளவு கஷ்டப்பட்டு திரட்டி நிதியை ஒரேயளவில் செலவிட்டு விடுவது ஜீரணிக்க முடியாத ஒன்று என்றால் அது மிகையாகாது.

சில செலவுகள் தவிர்க்க முடியாது என்றாலும் சடங்குகளையும் திருவிழாக்களையும் நடத்தும்போது ஒருவரையொருவர் மிஞ்சக்கூடிய நிலையில் போட்டி போட்டுக்கொண்டு செலவு செய்வது வரவேற்கத்தக்கதல்ல. ஆடம்பரமே திருவிழா என்றால் அவ்விழா ஒரு கண்காட்சியாக மாறிவிடுமே அல்லாமல் அங்கு பக்தியைத் தூண்டிவிடக்கூடிய சூழல் உருவாகாது.

இச்சூழலில் மக்களும் வேடிக்கை பார்க்க வரும் கூட்டமாக நடந்து கொள்வதில் வியப்பில்லை. சமயத்துக்குப் புறம்பான, அருவருப்பை உண்டாக்கக்கூடிய செயல்களும் அதிகம் நடைபெறுவதைத் தடுக்க முடியாது. இதற்குத் தைப்பூசத் திருவிழா ஒரு "நல்ல" எடுத்துக்காட்டு.

இந்த நிலைமையைத் தவிர்த்து காணாமல் போன பக்திச் சூழலை மீண்டும் கொண்டு வர என்ன செய்யலாம்? பல ஆண்டுகளாக நடந்து வரும் நடைமுறைகளை இரவோடு இரவாக நாம் ஒழித்து விட முடியாது. புதியதோர் சூழ்நிலையை உருவாக்க இன்னும் பல ஆண்டுகள் ஆகலாம். இருப்பினும் முயற்சிகள் இப்போதே தொடங்கப்பட வேண்டும். ஆலய நிர்வாகங்கள் சமய உணர்வோடு சிந்தித்துச் செயல்பட வேண்டும். தேவையற்ற சடங்குகளையும் அனாவசியமான செலவுகளையும் ஆகமத்திற்குப் புறம்பான வழிபாடுகளையும் நிறுத்துவதற்குத் துணிவும் மன உறுதியும் வேண்டும். சமய அறிவின் மூலமாக மட்டும் இப்பண்புகளை போற்றலாம்.

மக்களை முறைப்படுத்தும் கடமையும் ஆலயங்களுக்கு அதிகம் உண்டு. இதை சமயப் பிரச்சார நடவடிக்கைகளின் மூலமாக நாம் செய்யலாம்.

ஒவ்வொரு ஆலயமும் தங்களுடைய ஆண்டுச் செலவினத்தில் கணிசமான தொகையை சமயப் பிரச்சாரத்துக்கு ஒதுக்கி அதற்கேற்ற நடவடிக்கைகளுக்குச் செலவிட வேண்டும். வாரத்திற்கு ஒரு முறை சமயப் பேச்சு, சமய சொற்பொழிவுகள், சமய வகுப்புகள், தேவார பஜனைக் குழு அமை[illegible], [illegible]ண்டு பிரசுரங்கள், நூல்கள் வெளி[illegible] அமைத்தல், இரண்டு நாள் சமயப் பயிற்சி வகுப்புக்கள், இளைஞர் பணி முகாம்கள் என்று பல நடவடிக்கைகளை ஆலயங்கள் செய்ய முன் வர வேண்டும். இந்நடவடிக்கைகளில் உதவ இந்து சங்கமும், இந்து தர்ம மாமன்றம், இந்து இளைஞர் இயக்கம் போன்ற அமைப்புகளும் காத்திருக்கின்றன என்பதை ஆலயங்கள் மறக்கக்கூடாது.

சமயத்தைப் பாதுகாப்பதற்கும் வளர்ப்பதற்கும் மக்களை சமயத்தின் பால் திருப்புவதற்கும் தங்களிடையே இருக்கும் வேற்றுமைகளையும், மனக்கசப்புகளையும் மூட்டை கட்டி வைத்துவிட்டு, ஆலயங்களும் சமய அமைப்புக்களும் ஒருங்கிணைந்து செயல்பட முன்வர வேண்டிய காலகட்டம் இது.

ஆலயங்களோடு சமயப் பிரச்சார நடவடிக்கைகளை நடத்தவும் உதவவும் மலேசிய இந்து சங்கம் என்றுமே தயங்கியதில்லை. மாறாக ஆலயங்களைத் தங்களின் சமயப் பிரச்சாரம், சமயக் கல்வி திட்டங்களில் பங்கு கொள்ள அது வரவேற்கின்றது.

இந்தத் தைப்பூசத் திருநாளில் ஆலயங்கள் தங்களின் சமயப் பொறுப்புகளை உணர்ந்து புதிய உத்வேகத்துடனும் சமய தத்துவங்கள் கூறும் வழிமுறைகளுக்கு ஏற்பவும் செயல்பட மலேசிய இந்து சங்கம் அன்புடன் கேட்டுக்கொள்கிறது. இப்படிக் கூறினார் அ.வைத்தியலிங்கம்.



**"இதயத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ள தீர்மானித்துக்கொண்டால், இறைவன் பிரார்த்தனையைக் கேட்டுக்கொள்வான். ஆனால், ஆணவமுள்ளவனுடைய பிரார்த்தனையையும், பேரம் பேசுபவனுடைய பிரார்த்தனையையும் அவன் ஒரு நாளும் கேட்பதில்லை."**




# எழுதுங்கள்!

இந்த "சிதறும் தேங்காய்கள்" சிற்றேட்டினை படித்துவிட்டு உங்களது உண்மையான எண்ணக் குமுறல்களை நாங்கள் அறிந்துகொள்ள விரும்புகிறோம். ஆகவே, நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் என்பதை தாராளமாக எங்களுக்கு எழுதி அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம். உங்களது கடிதங்களை தபால் அல்லது தொலைநகல் மூலமாக அனுப்பி வைக்கலாம்.

**பினாங்கு பயனீட்டாளர் சங்கம்**
228, Jalan Macalister, 10400 Pulau Pinang
Tel : 04-2293511 Fax: 04-2298106


படிப்பகம்

www.padippakam.com

# தேங்காய் விரயத்தைக் குறைப்போம்! குப்பைக்குச் செல்வதைத் தடுப்போம்!



Published by Consumers' Association of Penang (CAP), 228, Jalan Macalister, 10400 Pulau Pinang. Tel: 04-2293511
Printed by : Jutaprint, 2, Solok Sungei Pinang 3, Sg. Pinang, 11600 Penang, Malaysia.

படிப்பகம்